# தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி - ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

13 ஆம் பக்கத் தொடர்ச்சி

துணை அமைப்பாளர்கள் - 1) ஆ. அக்பர் 4/9/29, பள்ளிவாசல் தெரு, புளியரை, தென்காசி. 2) சு. சப்பாணி 3-5-34, கண்டங்காட்டு தெரு, இலத்தூர், தென்காசி. 3) வை. லிங்கம் 5-20-40, மனக்காட்டு தெரு, அச்சன்புதூர், தென்காசி. 4) ப. சண்முகவேல் 4வது தெரு, சதியன் மேடு, செங்கோட்டை புதூர், தென்காசி. 5) சி. முத்தையாசாமி தங்கமுத்து அம்மன் கோவில் தெரு, அச்சன் புதூர், தென்காசி மாவட்டம்,

### கடையநல்லூர் நகரம்

அமைப்பாளர் - சு. பேச்சிமுத்து 16இ. 3 திலகர் தெரு, கிருஷ்ணாபுரம், தென்காசி மாவட்டம்,

துணை அமைப்பாளர்கள் - 1) க. பாண்டி 23/ஏ-1, கீழப்பாளையம் தென்வடல் தெரு, மேலக்கடையநல்லூர், கடையநல்லூர் - 627751. 2) மா. அன்னலெட்சுமி 221/5, கிருஷ்ணன் கோவில் வடக்கு தெரு, கிருஷ்ணபுரம் - 627759. 3) சு. முத்துக்குமார் 35, கண்ணார் தெரு, மேலக்கடையநல்லூர், 4) ஆ. மாரியப்பன் எண். 28/149, கற்பக விநாயகர் கோவில் தெரு, கிருஷ்ணாபுரம் - 627759. 5) சு. மாரிச்செல்வம் 10/19, நாடார் கீழத் தெரு, மேலக்கடைய நல்லூர், தென்காசி.

### செங்கோட்டை நகரம்

அமைப்பாளர் - ந. கண்ணன் 30, அம்பேத்கார் தெரு, செங்கோட்டை - 628809. தென்காசி மாவட்டம்,

துணை அமைப்பாளர்கள் - 1) பே. பரமசிவன் 72/61, திருவள்ளுவர் தெரு, செங்கோட்டை - 627809. 2) வீ. குமாரவேல் 30, செல்வ விநாயகர் கோவில் தெரு, செங்கோட்டை - 627809. 3) மு. ராமசாமி வாணியர் தெரு, செங்கோட்டை - 627809. 4) சு. பாபு 14/27, சமாதானம் தெரு, செங்கோட்டை - 627809. 5) பி. முருகையா 4. செல்லையா தெரு, செங்கோட்டை - 627809.

### தென்காசி நகரம்

அமைப்பாளர் - ச. வெங்கடாசலம் முப்புடாதியம்மன் கோவில் தெரு, தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) கு. முருகானந்தம் 29/58, உச்சிமாகாளியம்மன் 2ம் தெரு, கீழப்புலியூர், தென்காசி மாவட்டம். 2) ஆர். செய்யது அம்பியா 571, வடக்கு மவுண்ட் ரோடு, தென்காசி. 3) அ. முகம்மது அலி 129/6, பாறையடி 2ம் தெரு, தென்காசி. 4) வே. முத்து மங்கம்மா சாலை, தென்காசி மாவட்டம். 5) எஸ். மாரியப்பன் 46/108ஏ, கூளக்கடை தெரு, தென்காசி.

### சுரண்டை நகரம்

அமைப்பாளர் - கா. சண்முகசுந்தரம் 6-7-75, பிள்ளையார் கோவில் தெரு, கீழச்சுரண்டை , சுரண்டை, தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆ. குத்தாலிங்கம் 17/8/44, விவேகானந்தர் தெரு, சிவகுருநாதபுரம், சுரண்டை, தென்காசி. 2) இரா. நகுலன் 6-5-6. வடக்கு தெரு, கீழச்சுரண்டை, சுரண்டை, 3) மா. பிரின்ஸ்குமார் கீழச்சுரண்டை, சுரண்டை, தென்காசி. 4) சு. கணேஷ் 4-1-3, வடக்கு தெரு, கீழச்சுரண்டை, சுரண்டை.

### இலஞ்சி பேரூர்

அமைப்பாளர் - சு. சாமித்துரை ஜுப்லி தென்வடல் தெரு, இலஞ்சி. தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) அ. மணிகண்டன் நாராயணசாமி கோயில் தெரு, இலஞ்சி. 2) சி. தங்கராஜ் நாராயணசாமி கோயில் தெரு, இலஞ்சி, 3) வே. சுபாஷ் உச்சிமாகாளியம்மன் கோவில் தெரு, இலஞ்சி.

### மேலகரம் பேரூர்

அமைப்பாளர் - கு. பகவதிராஜ் 17, தெப்பகுளம் தெரு, மேலகரம் தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆத்தியப்பன் 73, முப்புடாதி அம்மன் கோவில் தெரு, மேலகரம். 2) ச. சாமியா சர்ச் தெரு, குடியிருப்பு. 3) கு. சுப்பிரமணியன் வடக்கு தெரு, குடியிருப்பு, தென்காசி மாவட்டம்.

### குற்றாலம் பேரூர்

அமைப்பாளர் - கு. முத்துகுமார் 170, அண்ணா நகர், குற்றாலம், தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) இசக்கிராஜ் 58/பி, ஐந்தருவி ரோடு, குற்றாலம், தென்காசி. 2) த. கருப்பசாமி 57, மத்தாளம்பாறை ரோடு, குற்றாலம், தென்காசி. 3) ஜெ. ரவிகுத்தாலிங்கம் 63/32, சன்னதி பஜார் குற்றாலம், தென்காசி.

### சுந்தரபாண்டியபுரம் பேரூர்

அமைப்பாளர் - செ. சாமி 9-3-27-6ஏ, மதகுதெரு, சுந்தரபாண்டியபுரம், தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஈ. சுப்பையா 10/1, பம்படி தெரு, சுந்தரபாண்டியபுரம், தென்காசி மாவட்டம். 2) ப.இசக்கி மேட்டு காலனி, சுந்தரபாண்டியபுரம், தென்காசி. 3) க. துரை 21/பி, டாணா தெரு, சுந்தரபாண்டியபுரம், தென்காசி மாவட்டம்.

### வடகரை பேரூர்

அமைப்பாளர் - சி. அப்துல்காதர் 51/ஜாகிர் உசேன் நகர் 4-வது தெரு, வடகரை, தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) அப்துல்ரஹீம் 30/2, ஜாகிர் உசேன் நகர் 4வது தெரு, வடகரை, தென்காசி மாவட்டம். 2) சு. வீரமுத்து உண்மை விநாயகர் கோவில் தெரு, வாவா நகரம், வடகரை, தென்காசி மாவட்டம். 3) சாகுல் கமீது 31/ஏ, ரகுமானியபுரம், வடகரை, தென்காசி மாவட்டம்.

### பண்பொழி பேரூர்

அமைப்பாளர் - மை. பாதுஷாமசூது ஊ.அ.நா. தெரு, பண்பொழி - 627807. தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) வே. வெள்ளியப்பன் கரிசல் வடகரை யூனியன் சாலை, கரிசல்குடியிருப்பு, தென்காசி மாவட்டம். 2) மா. பிச்சையா பள்ளிக்கூடத் தெரு, கரிசல்குடியிருப்பு, பண்பொழி - 627807. 3) சு. கருப்பசாமி கந்தசாமிபுரம், பண்பொழி - 627807.

### கீழப்பாவூர் பேரூர்

அமைப்பாளர் - தி. காலசாமி 181-சி, செல்லையா நாடார் தெரு, கீழப்பாவூர், தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) க. அருணாசலம் 2-1, தேவர் நடுத் தெரு, கீழப்பாவூர், தென்காசி. 2) பெ. கிருஷ்ணசாமி தெற்கு தெரு, மூலக்கரையூர், கீழப்பாவூர், 3) ரா. சிங்கப்பாண்டியன் தெற்கு தெரு, மேலூர், கீழப்பாவூர்.

### ஆழ்வார்குறிச்சி பேரூர்

அமைப்பாளர் - சை. விஸ்வநாதன் 5/7, புது தெரு, கல்யாணிபுரம், தென்காசி மாவட்டம். துணை

அமைப்பாளர் - 1) கி. இசக்கி 12/1, திருநீலகண்ட விநாயகர் தெரு, ஆழ்வார்குறிச்சி, தென்காசி. 2) ஈ. மகேஷ் 8, ஈஸ்வரநார் தெரு, பரும்பு, ஆழ்வார்குறிச்சி, தென்காசி. 3) இ. ஆதிமூல பெருமாள் 34,கீழ தெரு, கல்யாணிபுரம், தென்காசி மாவட்டம்.

### முக்கூடல் பேரூர்

அமைப்பாளர் - ச.முத்தப்பா 29, ஹைச் காந்தியார் தெரு, கலியன்குளம், தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) செ. சிவராமன் அம்மன் கோவில் தெரு, கலியன்குளம், தென்காசி மாவட்டம். 2) ஹ. ரமேஷ் 20/பி, பாரதியார் தெரு, முக்கூடல், 3) ஜெ. முத்துகிருஷ்ணன் காந்தி தெரு, சடையப்பபுரம்.

### அச்சன்புதூர் பேரூர்

அமைப்பாளர் - கி. அய்யப்பன் அண்ணாவி தெரு, பார்வதிபுரம், அச்சன்புதூர், தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆ. காசி அண்ணாவி தெரு, பார்வதிபுரம், அச்சன்புதூர், தென்காசி. 2) பா. தங்கச்சாமி 2, 1 மெயின் ரோடு, மேக்கரை, அச்சன்புதூர் 3) வே. லிங்கதுரை 14-3-28, பசும்பொன் நகர், அச்சன்புதூர்.

### சாம்பவர் வடகரை பேரூர்

அமைப்பாளர் - ப. பெருமாள் 13-1-32/7, யாதவர் தெற்கு தெரு, சாம்பவர் வடகரை, தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ரா. ராஜேந்திரன் 4-2-11ஏ, செக்கடி கிணற்றுத் தெரு, சாம்பவர் வடகரை. 2) மா. ராமர் 1-9-80, அணைந்த பெருமாள் தெரு, சாம்பவர் வடகரை. 3) அ. அருள்ராஜ் 13ஏ/1, கொம்புமாடசாமி கோவில் தெரு, சாம்பவர் வடகரை.

### புதூர் பேரூர்

அமைப்பாளர் - கா. குமார் தெற்கு தெரு, லாலா குடியிருப்பு, தென்காசி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) தா. ராஜேஷ் வடக்கு தெரு, லாலா குடியிருப்பு, தென்காசி மாவட்டம். 2) ரா. சக்திவேல் பிள்ளையார் கோவில் தெரு, மேலபுதூர், 3) மூ. திருமலை வேல்சாமி நடுத் தெரு, தவணை, தென்காசி.

குறிப்பு : 1. ஆலங்குளம் பேரூர், 2. ஆய்க்குடி பேரூர் பின்னர் அறிவிக்கப்படும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 17-02-2025.

**அன்னியூர் சிவா,எம்.எல்.ஏ.,**
செயலாளர்
தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி

---

## தமிழ்நாடு அரசின் நலத் திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்திட

# ஒன்றிய அரசின் பங்குத் தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் விடுவித்திடுவீர்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய மகளிர் – குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சருக்கு கடிதம்!

சென்னை, பிப். 20 -

**தமிழ்நாடு அரசின் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்திட ஏதுவாக, ஒன்றிய அரசு தனது பங்குத் தொகையை, குறிப்பிட்ட காலத்திற்குள் விடுவித்திட வேண்டுமென்று வலியுறுத்தி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி அவர்களுக்கு நேற்று முன்தினம் (18.2.2025) கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், ஒன்றிய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் 31.01.2025 ஆம் நாளிட்ட கடிதத்தில், திறன்மிகு குழந்தைகள் மையம் (Mission Saksham Anganwadi & POSHAN 2.0), மகளிர் சக்தி இயக்கம் (Mission Shakthi) மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு சேவைகள் திட்டம் (Mission Vatsalya) போன்ற ஒன்றிய அரசின் நிதியுதவித் திட்டங்களுக்கு, 2912025ஆம் நாள் நிலவரப்படி ரூ.716.05 கோடி செலவழிக்கப்படாமல் உள்ளது எனத் தெரிவித்துள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் அனைத்து நலத் திட்டங்களும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருவதுடன், ஒன்றிய அரசு நிதியுதவி வழங்கும் திட்டங்களுக்கு மாநில அரசின் பங்களிப்பு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முறையாக வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான நேர்வுகளில், ஒன்றிய அரசின் நிதிப்பங்கு காலாண்டின் இறுதியிலோ அல்லது அடுத்த நிதியாண்டின் முதல் காலாண்டிலோ மட்டுமே வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், நிதியாண்டின் முடிவிற்குள் ஒன்றிய அரசு ஒதுக்கும் தொகையை மேற்குறிப்பிட்ட திட்டங்களுக்குக் குறுகிய காலத்திற்குள் பயன்படுத்த இயலாத நிலை உள்ளதாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா (PMMVY) என்னும் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 304 கோடி ரூபாயில், ஒன்றிய அரசின் பங்குத் தொகையான 184 கோடி ரூபாய் இது நாள் வரை வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளதால், பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் உரிய காலத்தில் வரவு வைக்க இயலாமல் உள்ளதையும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார். நேற்றைய தேதியில், ஒற்றை ஒருங்கிணைப்பு முகமை (Single Nodal Agency) கணக்குகளில் உள்ள 576.22 கோடி ரூபாயில், இந்த நிதியாண்டு முடிவதற்குள்

ரூ.482.80 கோடி பயன்படுத்தப்படும் என்றும், மீதமுள்ள தொகை ஒன்றிய அரசின் பங்காக அடுத்த நிதியாண்டுக்குக் கொண்டு செல்லப்படும் என்றும் தனது கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தமிழ்நாடு அரசின் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்திட ஏதுவாக, ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான பங்குத் தொகையை, குறிப்பிட்ட காலத்திற்குள் அதாவது அந்தந்த நிதியாண்டுக்குள்ளேயே விடுவித்திட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.




தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக இளைஞரணி அமைப்பாளராக பொம்மிடி ஊராட்சியைச் சார்ந்த சானவாஸ் துணை அமைப்பாளர்களாக பி.பள்ளிப்பட்டி தினேஷ், தமிழ்நெஞ்சன், பூதநத்தம் ராகுல்,மெணசி தினேஷ், போதக்காடு விருதாசலம், பையர்நத்தம் நரேஸ்வர்மா ஆகியோர் நியமனம் செய்யப்பட்டதை அடுத்து தருமபுரி மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர் பி.பழனியப்பன், மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன் ஆகியோரை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்று வருகின்ற 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள தேர்தலில் கழகதலைவரின் ஆணைப்படி கழக இளைஞர் அணி செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைபடி பாப்பிரெட்டிப்பட்டி தொகுதியில் அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற பாடுபடுவோம் என தெரிவித்தனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருப்பத்தூர் டாக்டர் எம். கிருஷ்ணன்
### பிப்ரவரி 20 (1994)



சுயமரியாதை இயக்கத்தின் சென்னை மாவட்ட இணைச் செயலாளராக பணியாற்றியவர்.

1.4.1945ல் சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடைபெற்ற மாவட்ட 14வது திராவிடர் (ஜஸ்டிஸ்) மாநாட்டுச் செயலாளராக பணிபுரிந்தவர்.

1948ஆம் ஆண்டு பெரியார் தலைமையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு – கருப்புச் சட்டை போரிலும், 1953ல் நடைபெற்ற குலக் கல்வி எதிர்ப்புப் போரிலும் பங்கேற்றவர்.

1971ல் நடைபெற்ற பொதுத்தேர்தலின்போது கழக துணை ஆய்வுக்குழு உறுப்பினராகவும் செயல்பட்டவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பேராசிரியர் ஆகியோரின் அன்பைப் பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

## ஆவடியில் மக்கள் நலத்திட்டப் பணிகள்!

*திருவள்ளூர், பிப். 20-*

*திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி பகுதியில் 1.10 கோடி மதிப்பீட்டில் மக்கள் நலத் திட்ட பணிகளை அமைச்சர் சா.மு.நாசர் மற்றும் மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்தனர்.*


*ஆவடி மாநகராட்சி பகுதியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா மு நாசர், 1.10 கோடி மதிப்பீட்டில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார்.*

*அந்த வகையில், தமிழகத்தில் முதன்முறையாக ஆவடி அரசு பொது மருத்துவமனையில், சி.எஸ்.ஆர் நிதி பெற்று, 28 லட்சம் மதிப்பில், காச நோய் கண்டறியும் அதிநவீன கருவி ஆய்வகத்தை அமைச்சர் நாசர், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் பிரதாப் ஆகியோர் வருகை தந்து திறந்து மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.*

*இந்த கருவி மூலம், காச நோயை துல்லியமாக கண்டறிந்து, 2 மணி நேரத்தில் ஆய்வறிக்கையை பெற முடியும். தனியார் மருத்துவமனையில் இந்த பரிசோதனைக்கு 2000 முதல் 3000 ரூபாய் வரை செலவாகும். இதைத் தொடர்ந்து, ஆவடி தொகுதிக்குட்பட்ட பகுதியில் 5 சிந்தாமணி நியாய விலை கடை மற்றும் 2 அமுதம் நியாய விலை கடை, நீண்ட நாள் கோரிக்கையான 6 மின் மாற்றிகளை அமைத்து மக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார்.*


எட்டாம் ஆண்டு
நினைவு அஞ்சலி

மறைவு : 20.02.2017



**K.P.K.தங்கவேலு**
முன்னாள் மாவட்ட கழக செயலாளர், புதுக்கோட்டை தெற்கு
முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர்

............... தீராத நினைவுகளுடன் ...............

**K.P.K.T.தங்கமணி**
ஒன்றிய கழக செயலாளர், திருவரங்குளம் (மேற்கு)

**K.P.K.T.T.வள்ளியம்மை தங்கமணி**
முன்னாள் ஒன்றியப்பெருந்தலைவர்

**K.P.K.குடும்பத்தினர்கள், பாத்தம்பட்டி.**